புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • செப்டம்பர் 21, 2023 • புரட்சி 23 • முழக்கம் 36 • விலை ரூ.3.00

## பெரியார் பிறந்தநாளில் சுயமரியாதைத் திருமணங்கள்

# மேட்டூரில் மக்களைக் கவர்ந்த பேரணி




145வது பிறந்த நாள் சார்பாக கோனூர் சமத்துவபுரத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் மேட்டூர் RS பகுதியைச் சார்ந்த அமுதா - குணசேகரன் அவர்களது மகன் ஜெகதீஸ், கோனூர் சமத்துவபுரத்தைச் சார்ந்த ராதா - மகாலிங்கம் ஆகியோரது மகள் திவ்யாவிற்கும் தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல் தலைமையில் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு உறுதிமொழி கூற சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது.

மாலை 4.00 மணி அளவில் சமூக நீதி பேரணி மேட்டூர் ஒர்க்க்ஷாப் கார்னர் பகுதியில் சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல், மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் தலைமையேற்க மேட்டூர் நகர தலைவர் செ. மார்ட்டின் முன்னிலையில் நகர செயலாளர் சு.குமரப்பா கொடியசைக்க பேரணி தொடங்கியது. பேரணியில் இரண்டு வாகனங்களில் எது சனாதனம்? என்பது பற்றியும் மற்றொரு வாகனத்தில் எது திராவிடம்? என்பது பற்றியும் தோழர்கள் வேடமிட்டு அமர்ந்து இருந்தனர். சனாதன வாகனத்தில் சலவைத் தொழிலாளியாக நங்கவள்ளி உமாசங்கர், தூய்மைப் பணியாளராக சின்னராசு, முடி திருத்துபவராக அவினாசி, முடி வெட்டிக் கொள்பவராக குமார் செருப்புத் தைக்கும் தொழிலாளியாக ஏற்காடு தேவா, பறை அடிப்பவராக நங்கவள்ளி சிவக்குமார், பார்ப்பனராக நங்கவள்ளி கிருஷ்ணன் ஆகிய தோழர்களும், எது திராவிடம் என்ற வாகனத்தில் மருத்துவராக கனகா, நீதிபதியாக அறிவுமதி, காவல் அதிகாரியாக மணிகண்டன், பொறியாளராக RS பகுதி திலீபன் ஆகிய தோழர்களும் வேடமிட்டு அமர்ந்திருந்தனர். இரு வாகனமும் பேரணிக்கு முன்பாக சென்றது. அதற்கு முன்பாக பறை முழக்கத் தோழர்கள் பறையடித்து சென்றனர். பேரணியில் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்ற கழகம், விடுதலை சிறுத்தைகள், ஆதித் தமிழர் பேரவை, காங்கிரஸ், தமிழ்ப்புலிகள் கட்சி, திராவிடத் தமிழர் எழுச்சிக் கழகம், SDPI, திராவிடர் பண்பாட்டு நடுவம் ஆகிய அமைப்புகளின் பொறுப்பாளர்களும் தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

பேரணியின் நிறைவில் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமை உரையுடன் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மேற்கு மாவட்ட செயலாளர் மெய்யழகன், தமிழ்ப்புலிகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் சதீசு, SDPI கட்சியின் சேலம் மேற்கு மாவட்டப் பொருளாளர் பைரோஸ், காங்கிரஸ் கட்சியின் நகர துணைத் தலைவர் காளியப்பன், ஆதித்தமிழர் பேரவை சேலம் (மே) இளைஞரணி செயலாளர் ரமேசு, திராவிடத் தமிழர் எழுச்சி கழகத்தின் பொறுப்பாளர் தமிழ்மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மேட்டூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சிவக்குமார், திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு உறுப்பினர்கள் காவை ஈஸ்வரன், அ.சக்திவேல், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் பேரணி குறித்தும், 2024 நாடாளுமன்ற தேர்தலில் சனாதனக் கும்பல் நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டும் என்றும், சனாதனம் யாருக்கானது? திராவிடம் இந்த மண்ணில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்தும் பேசினர். பேரணியில் சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், ஏற்காடு பெருமாள் ஆகிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். மேலும் சேலம் மாநகரம், ஏற்காடு, இளம்பிள்ளை, தாரமங்கலம், நங்கவள்ளி, வனவாசி, மேட்டூர் RS., மேட்டூர் நகரம், கொளத்தூர், தார்க்காடு, உக்கம்பருத்திக்காடு, காவலாண்டியூர் ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்களும், தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

**சேலம் கிழக்கு :** சேலம் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பாக தந்தை பெரியாரின் 145வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. சேலம் மாநகரத்தில் மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் டேவிட் கழகக் கொடியேற்றினார். ஆத்தூரில் உழவர் சந்தை எதிரிலுள்ள அம்பேத்கர், தந்தை பெரியார் சிலைகளுக்கு மகேந்திரன் தலைமையிலும், ஏற்காடு ஒண்டிக்கடை பேருந்து நிறுத்தம் அருகே அமைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு மாவட்ட அமைப்பாளர் பெருமாள் தலைமையிலும், K.R தோப்பூரில் கண்ணன் தலைமையிலும், சிந்தாமணியூரில் பிரகாஷ், முருகேசன், ரஞ்சித் தலைமையிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு சமூக நீதி நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது. தாரமங்கலம், பாரப்பட்டி, செம்மாண்டப்பட்டி பகுதிகளில் கொடியேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் சேலம் மாநகரத் தலைவர் சரவணன், மாநகரச் செயலாளர் ஆனந்தி, மாநகர அமைப்பாளர்கள் பாலு, தேவராஜ், கிழக்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் வெற்றி முருகன், மாநகர தோழர்கள் மற்றும் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை இளம்பிள்ளை பகுதித் தலைவர் ரமேஷ், திவ்யா மற்றும் இளம்பிள்ளை தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**காவலாண்டியூர்:** காவலாண்டியூரில் பெரியார் படங்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது. காவலாண்டியூர் பகுதியில் வசிக்கும் பெண்கள் தமிழ்நாடு அரசு வழங்கிய கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற்றதன் மகிழ்ச்சியாக அத்தொகையில் காவை பெரியார் படிப்பகத்தில் இனிப்பு பொங்கல் வைத்து ஊர் பொதுமக்கள் அனைவருக்கும் வழங்கினர். தொடர்ந்து காவையில் அக்ரி பரமேஸ்வரன், செ.செ.காட்டுவளவில் பழனிசாமி, காந்திநகரில் பச்சியப்பன், மூலக்கடையில் இராஜேந்திரன், செட்டியூரில் சின்ராசு ஆகியோர் கழகக் கொடியேற்றினர்.

காவை ஈசுவரன், சித்துசாமி, பொன்னுசாமி, காவை சசி, சேகர், சந்தோஷ், சந்திரன், சின்ராசு, மாரி, பரமேஸ்வரன், அபிமன்யு, காவை இளவரசன், சென்னப்பன், சரசுவதி, பவித்தரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## களப்பணியில் கழக செயல்வீரர்கள் தீவிரம்

# திருப்பூரில் எழுச்சிப் பேரணி

திருப்பூர் : தந்தை பெரியாரின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு 17.09.2023 அன்று காலை 11 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன்பிருந்து சனாதன ஒழிப்புப் பேரணி கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையில் மாவட்டத் தலைவர் முகில்ராசு முன்னிலையில் நடைபெற்றது.

பேரணியை பெரியாரிய சிந்தனையாளர் பாரதி சுப்பராயன் தொடங்கி வைத்தார். ஆதித்தமிழர் பேரவை, புரட்சிகர இளைஞர் முன்னணி, மக்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு, பகத்சிங் பேரவை உள்ளிட்ட தோழமை இயக்கத்தினர் பங்கேற்றனர்.

பேரணியில் குழந்தைகள் பெண்கள் என நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டு சனாதன ஒழிப்பு, தந்தை பெரியாரின் உழைப்பு, சாதனைகளை முழக்கங்களாக எழுப்பினார்கள்.

பேரணி ரயில் நிலையம் அருகில் உள்ள பெரியார் அண்ணா சிலை அருகே நிறைவடைந்தது.

பின்னர் திருப்பூர் மாநகருக்கு உட்பட்ட வீரபாண்டி, குளத்துப்பாளையம், மாஸ்கோ நகர், ரங்கநாதபுரம், அம்மாபாளையம், அணைப்பாளையம், அனுப்பர்பாளையம், பெரியார் காலனி, ராயபுரம், அணைமேடு உள்ளிட்ட இடங்களில் கழகக் கொடியேற்றப்பட்டது.

நிகழ்வில் கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்டச் செயலாளர் நீதிராசன், மாநகரச் செயலாளர் இராமசாமி, தெற்கு பகுதி கழகச் செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர் முத்து, பல்லடம் நகர செயலாளர் கோவிந்தராஜ், 15 வேலம்பாளயம் பகுதி அமைப்பாளர் மாரிமுத்து, தாராபுரம் செல்வம், மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் கணக்கன்,அய்யப்பன், சரஸ்வதி, முத்துலட்சுமி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## சனாதனிகளே இதற்கு பதில் என்ன? (2)

# தபோல்கர், கவுரி லங்கேஷ் கொலைக் குற்ற வழக்கு திரும்பபெறப்பட்டு குற்றவாளிகள் விடுதலை

மராட்டிய மருத்துவர் பகுத்தறிவாளர், தபோல்கர், இடதுசாரி சிந்தனையாளர்கள் கோவிந்த் பன்சாரே, கல்புர்கி, இந்துத்துவ எதிர்ப்பாளர் கௌரி லங்கேஷ் ஆகியோர் மோடி ஆட்சியில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்த கொலைகளை செய்தது கோவாவில் இருந்து இயங்கும் சனாதன சபை (சனாதன் சத் சன்ஸ்தா) எதிர்ப்பாளர்களை சுட்டுக் கொள்வதுதான் சனாதன வாழ்க்கை நெறியா? சனாதனிகள் பதில் சொல்ல வேண்டும்.

இந்த அமைப்பை ஒன்றிய ஆட்சி தடை செய்யவும் இல்லை. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதனம் என்ற தத்துவத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசியதற்காக இந்துக்களை கொலை செய்ய வேண்டும் என்கிறார் என்று திரித்து பேசும் சங்கிகள் சனாதன எதிர்ப்பாளர்கள் அன்று இந்த நான்கு சிந்தனையாளர்களையும் சுட்டு கொலை செய்தார்களே சனாதனிகள் இதற்கு என்ன பதிலை கூறப் போகிறார்கள். மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்து வந்த டாக்டர் தபோல்கர் பூனேயில் நடைப்பயிற்சி செய்து கொண்டிருந்தபோது 2013 ஆகஸ்ட் 20ல் சுட்டுக் கொல்லப்பட்டார். வழக்கை விசாரித்த சிபிஐ கொலை செய்தவர்கள் சனாதன சபை என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் என்று கூறியது. 5 ஆண்டுகள் கழித்து அமுல் கலே, ராகேஷ் பங்கேரா மற்றும் அமித் திக்விக்கார் என்ற மூன்று பேரை கைது செய்தது. பூனே நீதிமன்றம் மூன்றே மாதங்களில் இவர்களுக்கு நிபந்தனையற்ற பிணை வழங்கியது. காரணம் 90 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கையை சிபிஐ தாக்கல் செய்யவில்லை என்பதுதான்.

2015 ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் தேதி பெங்களூரில் கௌரி லங்கேஷ் சுட்டுக் கொல்லப்பட்டார். இடதுசாரி சிந்தனையாளரான கோவிந்த் பன்சாரே 2015 பிப்ரவரி 20ஆம் தேதி உபி மாநிலம் கோலாப்பூரில் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலையில் குற்றம்சாட்டப்பட்ட அந்த மூன்று நபர்கள் இந்த கொலைகளிலும் குற்றம் சாட்டப்பட்டு பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்தக் கொலைக் குற்றவாளிகள் கூட கவுரி லங்கேஷ் வழக்கு விசாரணையின் போது கைது செய்யப்பட்டவர்கள். அப்போது சித்தராமையா தலைமையிலான ஆட்சி கர்நாடகாவில் நடைபெற்றுவந்த காரணத்தினால் தான் அவர் விசாரணையில் தீவிரம் காட்டி கைது செய்யப்பட்டார்

சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசிய உதயநிது ஸ்டாலின் இந்துக்களை கொலை செய்யச் சொன்னார் என்று கேவலமாக திரித்து பேசும் சங்கிகளைக் கேட்கிறோம், சனாதனத்தை எதிர்த்தவர்களை உண்மையிலேயே கொலை செய்த சனாதன் வெறிக் கும்பலை சட்டத்தின் பிடியில் இருந்து காப்பாற்றத் துடிப்பதற்கு என்ன பெயர்? இதுதான் சனாதன வாழ்கை முறையா?

சிபிஐ கடந்த புதன்கிழமை அன்று மூன்று குற்றவாளிகளையும் விடுதலை செய்து விடலாம் என்றும், இந்த வழக்கில் மேலும் தடயங்கள் ஏதும் கிடைக்கவில்லை என்று கூறி மனு தாக்கல் செய்துள்ளது. சிபிஐ அமைப்பின் துணைத் தலைவர் எஸ்.பி.விகாஸ்குமார் மீனா இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார். இந்த கொலைகளுக்கு சதித்திட்டம் தீட்ட முக்கிய மூளையாக செயல்பட்ட வீரேந்திர சிங் துவக்கே மற்றும் துப்பாக்கியால் சுட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட ஐந்து பேர் நீதிமன்ற விசாரணையில் உள்ளனர். இவர்களையும் விடுதலை செய்து விடலாம் என்று அரசு சிறப்பு வழக்கறிஞர் சிபிஐ சார்பாக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

தொடரும்

## கள்ளக்குறிச்சியில் பெரியார் பிறந்தநாள் விழா

***கள்ளக்குறிச்சி*** *: தந்தை பெரியார் 145வது பிறந்தநாளில் கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகம் சார்பில் சங்கராபுரத்திலுள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை தலைமையிலும், சு.கௌத்தூரில் உள்ள பெரியார் சிலைக்கு அறிவியல் மன்றத் தோழர் வீ.முருகன் தலைமையிலும், பாக்கம் புதூரில் உள்ள பெரியார் சிலைக்கு ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் இரா.கார்மேகம் தலைமையிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் செந்தமிழ்பட்டு அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.*

*நிகழ்வில் கடுவனூர் ஊராட்சி மன்றத் தலைவர் அ.ஏழுமலை, விசிக ஜெயபால், சங்கராபுரம் ஒன்றிய செயலாளர் அன்புரவி, சே.வே.ராஜேஷ் மெ.சுபாஷ், சு.வல்லரசு, கே.கவுதம், ம.பிரபாகரன், மு.ராமச்சந்திரன், இராமலிங்கம் , மக்கள் அதிகாரம் முருகேசன், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தோழர்கள் சுபாஷ், தமிழரசன், கார்த்திக், ரோனித் , விஜய், குறளரசன், கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

***இராணிப்பேட்டை*** *: இராணிப்பேட்டை மாவட்டம் சார்பாக நெமலியில் தந்தை பெரியார் 145ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா திலீபன் தலைமையில் நடைபெற்றது.*

*சேட்டு, பகலவன், மோகன், திருநாவுக்கரசு, பகலவன், இந்துமதி, இம்ரான், அப்பாஸ், அன்பு, அம்மு, ஜான்சி, சித்திக், ராஜீ, நியாஸ், மார்க்ஸிய ராணி, அறிவுமணி, இனியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

***திருச்சி*** *: தந்தை பெரியாரின் 145வது பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி மாவட்ட கழகம் சார்பாக திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள பெரியார் சிலைக்கு முழக்கத்தோடு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.*

***சிவகங்கை*** *: சிவகங்கை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் முன்நின்று ஒருங்கிணைக்கப்பட்ட சனாதன ஒழிப்பு பேரணி சமூக நீதி கூட்டமைப்பு என்ற பெயரில் அனைத்து முற்போக்கு இயக்கங்கள் கட்சிகள் இணைத்து காரைக்குடியில் முதன் முதலாக நடைபெற்றது.*

## வினா விடை

• அதிமுக கூட்டணியில் பாஜக இல்லை - ஜெயக்குமார்

**ஓஹோ, பாஜக கூட்டணியில் அதிமுக இடம் பிடிக்க தயாராகிறது போல**

• ரசாயனம் கலந்த விநாயகன் சிலையை நீரில் கரைக்கலாம் - நீதிபதி ஜீ.ஆர். சாமிநாதன்

**சிலை உருவத்தில் ஊர்வலத்தில் கலவரம் கூட செய்யலாம் என்று அந்த உத்தரவிலேயே சேர்த்து விடுங்கள்**

• நான் கேவலமான ரவுடி - சீமான்

**செந்தமிழன் கேவலமான ரவுடி அவர்களே வருக! வருக! தமிழகத்திற்கு நல்லாட்சி தருக!**

• கல்கி கிருஷ்ணமூர்த்தி என்ற பிராமணரும், எம்.எஸ்.சுப்புலட்சுமி என்ற இசை வேளாளரும் திருமணம் செய்து கொண்ட போது யாரும் எதிர்க்கவில்லையே - எச் ராஜா பேட்டி

**ஹலோ ராஜா எம்.எஸ்.சுப்புலட்சுமி கணவன் பெயர் சதாசிவம் உளறுவதை நிறுத்துப்பா.**

• எனக்கு துப்பாக்கி சுடவும் தெரியும் - அண்ணாமலை

**அதுக்காக எல்லாம் பாஜகவுக்கு ஓட்டு போட முடியாது.**

• இந்தியாவை பாரத் என்று அழைக்க வேண்டும் - பாஜக

**அருணாச்சல பிரதேசத்திற்கு சீனா என்று பெயர் சூட்டி இருக்கான், முதலில் அங்கே பாருங்கப்பா!**

## கழகம் நடத்திய பெரியார் விழா பேரணிகள்



திருப்பூரில் நடைப்பெற்ற சனாதன ஒழிப்புப் பேரணி



மேட்டூர் பேரணியில் சனாதன விளக்கக் காட்சி



சென்னையில் நடைபெற்ற பேரணி

## பெரியார் மீதான விமர்சனங்களுக்கு மறுப்பு (3)

# நேர்காணலா? நேர்மையற்ற காணலா?

### கொளத்தூர் மணி

பெரியார் முடிவெய்தி 50 ஆண்டுகள் கழிந்த பின்னரும் பெரியார் பற்றிய நினைவுகளும், தாக்கங்களும் ஒவ்வொரு நாளும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதே ரவிக்குமாரை ஆசிரியராகக் கொண்டு, நெய்வேலியில் இருந்து வெளிவந்த 'தலித்' இதழில் இதே இளையபெருமாள் என்ன சொல்லியிருக்கிறார் என்பதையும் பார்ப்போம்.

'தலித்' எண்.1 இதழ் ஏப்ரல்,1997 இதழில் ஒரு நேர்காணல்:

**"தற்கொலைப் படையாக மாறுங்கள்!**

தலைவர் எல்.இளையபெருமாளிடம் ஒரு பேட்டி... என்ற தலைப்பில் பக்கம் 11 முதல் பக்கம் 17 முடிய ஏழு பக்கங்களைக் கொண்ட பேட்டி அது. நாம் விவாதிக்கும் பொருள் குறித்த செய்தி பக்கம் 15இல் உள்ளது.

கேள்வி: கே.பி.எஸ்.மணியோடு உங்களுக்கு எப்போது இருந்து பழக்கம்?

பதில்: 1945 முதல் அவரோடு பழக்கம். முதலில் அவர் பெரியார் கட்சியில் இருந்தார். பெரியார் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முழு மனசோடு பாடுபடவில்லை. அம்பேத்கர் பிறந்த விழா நடத்தியதற்காக தொண்டு வீராசாமியை பெரியார் கட்சியை விட்டு நீக்கினார். பறை மேளம் அடிக்கக் கூடாது என்று கே.பி.எஸ் மணி பிரச்சாரம் செய்தார்.

பறைமேளம் அடிப்பதால் என்ன தவறு என்று பெரியார் அவரிடம் கேட்டார். நம் கட்சிக்காரர்கள் அனைவரும் மேளம் அடிக்கலாமென உத்தரவு போடுங்கள். நான் அதை எதிர்க்கவில்லை. ஆனால் எங்கள் சாதி மக்களை மட்டும் அடிக்கச் சொன்னால் அதை நான் எதிர்ப்பேன் என்று பெரியாரிடம் கே.பி.எஸ். மணி சொல்லிவிட்டார். தன்னை எதிர்த்துப் பேசியது பிடிக்காமல் அவரைப் பெரியார் கட்சியைவிட்டு நீக்கிவிட்டார்... என்ற பகுதியே அது.

பூவிழியன் என்பவரால் எழுதப்பட்டு 2005 ஆம் ஆண்டு வெளியிட்ட "கே.பி.எஸ்.மணி : ஒரு போராளியின் வரலாறு" என்றொரு நூல். எல். இளையபெருமாள் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய கே.பி.எஸ்.மணி என்பவரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல் அது.

அந்நூலின் 110,111 ஆகிய பக்கங்களில் உள்ள செய்தி ஒன்றினைக் காண்போம்.

ராணுவத்திலிருந்து 1946-ல் திரும்பியப் பிறகு 'விடுதலை' பத்திரிக்கையை கையில் எடுத்துக்கொண்டு "நான் இந்த கட்சியை இங்கு ஆரம்பிக்கப் போகிறேன்" என கே.பி.எஸ்.மணி அலைந்துள்ளார். தந்தையை ஒரு நாள் நள்ளிரவில் எழுப்பி இதனைக் கூறியும் இருக்கிறார். தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு பற்றி பெரியார் விடுதலை பத்திரிக்கையில் எழுதியதாலும், இவைகளைப் பற்றி கிராமங்கள் தோறும் பிரச்சாரம் செய்து வருகின்றார் என கேள்விப்பட்டதன் வாயிலாகவும் இவரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவராக இரண்டு வருடங்கள் இருந்தார் கே.பி.எஸ்.மணி.

அப்பொழுது பெரியார் சிதம்பரத்தில் திராவிடர் கழகக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள வரும்போது அதில் கே.பி.எஸ்.மணி கலந்து கொண்டார். கூட்டம் நிறைவு பெற்றபின் கே.பி.எஸ்.மணி ஒரு வேண்டுகோளை பெரியாரிடம் கூறினார். அதாவது தாங்கள் தீண்டாமை மற்றும் சாதி ஒழிப்பிற்காக மிகக் கடுமையான முறையில் பாடுபட்டு வருகிறீர்கள். அதனால், தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே செய்கின்ற பிணம் புதைத்தல், பறை அடித்தல், பிணக்குழி வெட்டுதல், இறந்த மாடுகளைத் தூக்குதல் போன்ற வேலைகளை இனி செய்யக்கூடாது. அவரவர் வகுப்பில் உள்ளவர்களே அவர்களுக்கான இவ்வேலையை செய்து கொள்ள வேண்டும் என விடுதலையில் ஒரு நாள் தலையங்கம் எழுதுங்கள் என்று கேட்டார்.

உடனே பெரியார் "மணி, என் கட்சியையும், என் பத்திரிக்கையையும் ஒரே அடியாகக் கெடுக்கிறதா நீ முடிவு பண்ணிட்டியா, இந்தத் தொழில் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் செய்யக் கூடாதுன்னா, அப்புறம் யார் தான் செய்யுறது" எனக் கேட்டார். இதற்கு பதில் கூற விரும்பாத கே.பி.எஸ்.மணி அன்றைய தினத்தில் இருந்து பெரியாரின் உறவையும், அவரின் கொள்கைகளையும் விட்டு விலகினார்.

கே.பி.எஸ்.மணி 1946-இல் இராணுவத்தில் இருந்து திரும்பிய பின்னர் திராவிடர் கழகத்தில் இணைந்தார். இரண்டு ஆண்டுகள் இருந்தார். பெரியார் பறை ஒழிப்பை ஏற்கவில்லை; அதனால் திராவிடர் கழகத்திலிருந்து விலகினார். இதுவே அவரது வாழ்க்கை வரலாற்று நூல் சொல்லும் செய்திகளின் சாரம்.

இவற்றின் உண்மைத் தன்மையை ஆராய்வோம். 1947 முதல் 1948 முடிய பெரியார் இரண்டு முறை மட்டுமே சிதம்பரம் வந்துள்ளார். முதல் முறை 1947 மார்ச் 8ஆம் நாள். இரண்டு ஆண்டுகள் திராவிடர் கழகத்தில் இருந்துள்ளார் கே.பி.எஸ்.மணி. எனவே சந்திப்பும் விவாதமும் நடந்தது அந்த நாளில் இருக்க முடியாது. அடுத்ததாக சிதம்பரம் வந்தது 29.9.1948



அன்று நடந்த பொதுக் கூட்டத்திற்காகத் தான். அன்று நடந்த சிதம்பரம் நிகழ்வை குறித்து 30.9.1948 விடுதலை கீழ் காணும் செய்தியை வெளியிட்டுள்ளது.

சிதம்பரம்,செப் 29 : கழகக் கொடி தாங்கிய ஆயிரக்கணக்கான கருஞ்சட்டைத் தோழர்கள் முன்னே அழகுற அணிவகுத்துச் செல்ல, பல்லாயிரக்கணக்கான மக்கள் இயக்க ஒலி முழக்கம் செய்து கொண்டு பின் செல்ல, பெரியார் அவர்களும் தோழர் மதியழகன் அவர்களும் காரில் அமர்த்தப்பட்டு இவ்வூர் மேலவீதி அஞ்சல் நிலையத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். மாலை 5 மணிக்கு ஊர்வலம் தொடங்கி தெற்கு வீதி, ரயிலடித் தெரு இவற்றின் ஊடே சென்று 5:45க்கு டவுன்ஹால் மைதானத்தை அடைந்தது. பெரியார் அவர்கள் காரை விட்டு இறங்கவும், ஏற்கனவே மைதானத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் "பெரியார் வாழ்க, பெரியார் வாழ்க" என்று வாழ்த்தொலி முழக்கம் செய்து பெரியார் அவர்களை வரவேற்றனர். ஆங்காங்கு மின் விளக்குகளும், ஒலிபெருக்கிகளும் அழகுற அமைக்கப்பட்டிருந்தன.

கூட்டத்தில் உள்ளூர் வெளியூர் தோழர்கள் உட்பட சுமார் 15 ஆயிரம் மக்கள் கலந்து கொண்டனர். பெரியார் அவர்கள் மேடை மீது அமரவும் தோழர்கள் இன்னிசை பாடினர். பிறகு மதியழகன் தலைமையில் பொதுக்கூட்டம் இனிது தொடங்கியது. தில்லை திராவிடர் கழகத் தலைவர் தோழர் கிருஷ்ணசாமி அவர்கள் அனைவருக்கும் நல்வரவு கூற, தோழர் திருநாவுக்கரசு அவர்கள் தில்லை திராவிடர் கழகத்தின் சார்பில் பெரியார் அவர்களுக்கு வரவேற்புரை வாசித்தளித்தார். பிறகு செல்வம் வாசகசாலை, அவ்வையார் கல்விக் கழகம், தெற்கிருப்பு மக்கள் கழகம், அண்ணாமலை நகர் இளைஞர் கழகம், புவனகிரி நெசவு தொழிலாளிகள் சங்கம், அண்ணாமலை நகர் திராவிட மாணவர் கழகம், கூத்தன் கோயில் திராவிடர் கழகம் ஆகிய கழகங்கள் சார்பாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டதோடு, கூத்தன் கோயில் திராவிடர் கழகத்தின் சார்பாகவும், திருவிடைமருதூர் திராவிடர் கழகத்தின் சார்பாகவும் முறையே 101 நாலணாக்கள் கொண்ட பணமுடிப்புகள் இந்தி எதிர்ப்பு நிதிக்காக நன்கொடையாக அளிக்கப்பட்டது.

தோழர் மதியழகன் தலைமை உரைக்குப் பின்பு தோழர் ஏ.பி. ஜனார்த்தனம் அவர்கள் சிறிது நேரம் பேசினார். பிறகு பெரியார் அவர்கள் நீண்ட கைத்தட்டலுக்கிடையே எழுந்து, காந்தியார் மறைவு குறித்தும், ஜின்னா மறைவு (11.09.1948) குறித்தும் வருத்தம் தெரிவித்துக் கொண்டதோடு இவர்கள் மறைவால் நாட்டுக்கேற்பட்ட நஷ்டத்தைப் பற்றியும் குறிப்பிட்டு விட்டு திராவிடர் கழகத்தின் வளர்ச்சி, திராவிடர் கழகத்தால் சாதிக்கப்பட்ட அருஞ்செயல்கள், காங்கிரசின் பிற்போக்கு, பார்ப்பனிய வர்ணாசிரம தர்மம் அழிக்கப்பட வேண்டியதன் அவசியம், இந்தி எதிர்ப்பின் நேர்மை, மாணவர் கடமை, பெண்கள் முன்னேற்றம் என இன்னோரன்ன பல விஷயங்கள் பற்றியும் மிகத் தெளிவாக சுமார் 3:15 மணி நேரம் பேசினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் பெரியார் அவர்களது சொற்பொழிவை மிக அமைதியாகக் கேட்டனர். தாய்மார்களும், குறிப்பாக கல்லூரி மாணவிகளும் பெரும் அளவுக்கு கூட்டத்தில் வந்து கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இரவு 10:30 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது. பெரியார் அவர்கள் அனைவருக்கும் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொண்டு, தோழர் பொன் ராமலிங்கம் அவர்கள் அழைப்புக்கிணங்கி அவருடன் புதுவை வந்து இரவு 1 மணிக்கு உணவு எடுத்துக்கொண்டு திண்டிவனம் வழியாக 30ஆம் தேதி காலை சென்னை வந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு முழு செய்தியையும் எழுத வேண்டி வந்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

"பெரியார் சிதம்பரத்தில் கழகக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள வரும்போது அதில் கே.பி.எஸ். மணியும் கலந்து கொண்டார். கூட்டம் நிறைவு பெற்ற பின் கே.பி.எஸ்.மணி ஒரு வேண்டுகோளை பெரியாரிடம் கூறினார்" என்கிறது கே.பி.எஸ். மணியின் வாழ்க்கை வரலாறு.

29.9.1948 அன்று கூட்டம் முடிவுற்றதும், 'பெரியார் அவர்கள் அனைவருக்கும் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொண்டு தோழர் பொன் ராமலிங்கம் அவர்கள் அழைப்புக்கிணங்கி அவருடன் புதுவை புறப்பட்ட செய்தியை 'விடுதலை' ஏடு கூறுகிறது. அவ்வாறாக கூட்ட மைதானத்தில் இருந்து புதுவை தோழருடன் புறப்பட்டு விட்ட பெரியாரிடம் கே.பி. எஸ்.மணியின் வாழ்க்கை வரலாற்று நூல் கூறுவது போன்ற (கூட்டம் நிறைவு பெற்றபின் கே.பி.எஸ்.மணி ஒரு வேண்டுகோளை பெரியாரிடம் கூறினார் ) நீண்ட உரையாடலை நிகழ்த்துவதற்கான வாய்ப்பெதுவும் இருந்திருக்க முடியாது என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

தொகுத்துப் பார்ப்போம்.

ரவிக்குமார் இளையபெருமாள் அவர்களின் "75வது பிறந்தநாளின் போது அவரிடம் பதிவு செய்யப்பட்ட அவரது சுருக்கமான தன் வரலாற்றை 'சித்திரை நெருப்பு' என்ற பெயரில் சிறு நூலாக வெளியிட்டேன். அந்த ஆண்டுதான் தமிழக அரசின் 'அம்பேத்கர் விருது' அவருக்கு வழங்கப்பட்டது" என்று அவரது 2010ஆம் ஆண்டு பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். (இளைய பெருமாளுக்கு தமிழக அரசின் 'அம்பேத்கர் விருது' வழங்கப்பட்டது 24.12.1998 அன்று ஆகும்)

அந்த 'சித்திரை நெருப்பு' நூலின் 56ஆவது பக்கத்தில் பறை ஒழிப்புக்கு ஆதரவு கேட்டபோது "இந்த தொழிலை வேறு யார் செய்வது? இளையபெருமாள் நீயே ஒரு மாற்றுக் கூறு" என்று 20.1948 அன்று சிந்தாதிரிப்பேட்டை வீட்டில் சந்தித்து கேட்டபோது சொன்னதாக குறிப்பிட்டுள்ளார். 20.12.1948 அன்று இரவு தான் சிறைபடுத்தப்பட்ட பெரியார் தஞ்சையில் விடுதலை செய்யப்பட்டார் என்ற செய்தியை முன்னரே கூறியுள்ளோம்.

அதே தலைவர் இளையபெருமாள் நெய்வேலி இருந்து அதே ரவிக்குமாரின் தொகுப்பிலும் தயாரிப்பிலும் வெளிவந்த ' தலித்' ஏட்டின் முதல் இதழில் (1997, ஏப்ரல்) ரவிக்குமாரும் உடன் இருந்து பதிவு செய்த நேர்காணலில்

"பறை மேளம் அடிக்கக் கூடாது" என்று கே.பி.எஸ். மணி பிரச்சாரம் செய்தார்.

பறைமேளம் அடிப்பதால் என்ன தவறு என்று பெரியார் அவரிடம் கேட்டார், அனைவரும் மேளம் அடிக்கலாம் என்று உத்தரவு போடுங்கள் நான் அதை எதிர்க்கவில்லை, ஆனால் எங்கள் சாதி மக்களை மட்டும் அடிக்கச் சொன்னால் அதை நான் எதிர்ப்பேன் என்று பெரியாரிடம் கே.பி.எஸ்.மணி சொல்லிவிட்டார்" என்று கே.பி.எஸ்.மணி வாதிட்டதாக உள்ளது.

1997 'தலித்' தலித் ஏட்டில் கே.பி.எஸ்.மணி பறை அடிப்பதை தடுக்க வேண்டும் என்று வாதிட்டதாக ரவிக்குமார் எடுத்த நேர்காணலில் கூறியுள்ளார் இளையபெருமாள்.

1998ஆம் ஆண்டு இளையபெருமாளின் 75ஆவது பிறந்தநாளை ஒட்டி ரவிக்குமார் பதிவு செய்த நேர்காணலில் ('சித்திரை நெருப்பு நூல்') இளையபெருமாளே பெரியாரிடம் கேட்டதாகவும் பெரியார் மறுத்ததாகவும், அதே இளையபெருமாள் கூறியுள்ளார்.

இரண்டில் எது உண்மை? இரண்டு நேர்காணலையும் பதிவு செய்த ரவிக்குமார்தான் விளக்க வேண்டும் அல்லது இரண்டுமே பொய்யா?

ரவிக்குமார் இதில் முரண்பட்டு நிற்கிறார். ஒரு நேர்காணல் பதிவில் கே.பி.எஸ்.மணி பெரியார் பறை அடிப்பது குறித்து கேள்விக் கேட்டார் என இளையபெருமாள் கூறினார் என்கிறார். அடுத்த ஆண்டு இளையபெருமாளே பெரியாரிடம் பறை அடிப்பது குறித்து கேட்டதாக இளையபெருமாள் கூறினார் என்கிறார்.

தொடரும்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# எம்.ஜி.ஆர் நகரில் பெரியார் சிலை கனிமொழி எம்.பி திறந்து வைத்தார்

செப்டம்பர் 16 அன்று சென்னை எம்ஜிஆர் நகரில் பெரியார் மார்பளவுச் சிலையை திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி திறந்து வைத்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், இனமான நடிகர் சத்யராஜ் முன்னிலையில் நிகழ்ச்சி எழுச்சியுடன் நடந்தது. திமுக சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜா விழாவில் பங்கேற்றார்.

எம்ஜிஆர் நகர் கழகப் பொறுப்பாளரும், செயலவை உறுப்பினருமான கரு.அண்ணாமலை இதற்கான ஏற்பாடுகளை செய்தார். அவர் நடத்தி வரும் கற்க கல்வி அறக்கட்டளை மற்றும் திராவிடர் விடுதலைக் கழக சார்பில் நடந்த நிகழ்வில் பெருமளவு மக்கள் பங்கேற்றனர். அரசு பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முன்னதாக கோவன் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது. தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

# 100வது கூட்டத்தை நிறைவு செய்து சென்னை மாவட்டம் சாதனை



**சென்னை :** தந்தை பெரியாரின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு 17.09.2023 காலை 10 மணியளவில் சென்னை சிம்சன் பூங்கா முன்பு அமைந்துள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் அனைவரும் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

பின்னர் இராயப்பேட்டை வி.எம் தெருவில் உள்ள பெரியார் சிலை முன்பு பார்த்திபன் - தாரணி, ராஷ்மி பச்சாய் - சாருக்கான் ஆகிய இரண்டு இணையர்களுக்கு சுயமரியாதைத் திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்தார்.

எது திராவிடம்? எது சனாதனம்? 100வது கூட்டம் மற்றும் தந்தை பெரியார் 145வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் 17.09.2023 மாலை 5 மணிக்கு இராயப்பேட்டை வி.எம் தெருவில் நடைபெற்றது.

முன்னதாக பேரணியானது அஜந்தா பேருந்து நிறுத்தத்திலுள்ள அண்ணா சிலையில் தொடங்கி வி.எம் தெரு பெரியார் சிலை அருகில் நிறைவடைந்தது.

அடுத்ததாக மாணவக் கலைக்குழுவின் பறையிசை, ஈரோடு பேரன்பு-வின் ராப் இசை மற்றும் தெருமுனைக் கூட்டங்களில் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்ற நாத்திகன் - உமாபதி -கார்மேகம் குழுவின் நையாண்டி அரசியல் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நிகழ்வில் முனைவர் தொல்.திருமாவளவன் அவர்களின் சனாதனத்திற்கு எதிரான யுத்தம் என்ற புத்தகத்தை கழகத் தலைவரும், கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் EWS இடஒதுக்கீடு - 68 ஆண்டுகள் கழித்து வஞ்சம் தீர்த்த பார்ப்பனர்கள் என்ற புத்தகத்தை கழகப் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரனும் வெளியிட்டனர்.

பின்னர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தோழர் தொல்.திருமாவளவன், கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மூன்று மாதங்களாக தமிழகமெங்கும் நடந்த எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டங்களின் சிறப்புக் காணொளி திரையிடப்பட்டது. இந்த காணொளியை கழகத் தோழர் பிரகாசு, கபிலன் ஸ்டூடியோ இணைந்து உருவாக்கினர். தெருமுனைக் கூட்டங்களின் புகைப்படக் கண்காட்சியும் நடைப்பெற்றது. அன்பு தன்சேகர் கூட்ட நன்கொடையாக ரூ.5000/- வழங்கினார்.

கூட்டத்தில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், திமுக மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, விசிக மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் சாரநாத், மண்டலச் செயலாளர் ரூதர் கார்த்திக் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பொதுக்கூட்டத்தை திருவல்லிக்கேணி பகுதிக் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**கோவை :** கோவை மாநகர மாவட்டக் கழகம் சார்பில் சக்கரவர்த்தி தலைமையில் இரத்தினபுரி ஆறுமுக்கு பகுதியிலும், மாவட்ட அமைப்பாளர் ந. புரட்சித் தமிழன் தலைமையில் காந்திபுரம் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இரவி தலைமையில் உடையாம்பாளையம் காந்திநகர் பகுதியிலும், பீளமேடு பகுதி அமைப்பாளர் இராஜாமணி தலைமையிலும், இராமகிருஷ்ணன் தலைமையில் உப்பிலிபாளையம் காந்திநகரிலும், கண்ணன் தலைமையில் உக்கடம் எல்.ஜி தோட்டத்திலும் பெரியார் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் ஒவ்வொரு பகுதியிலும் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகரத் தலைவர் நிர்மல் குமார், மாநகரச் செயலாளர் வெங்கடேசன், சூலூர் தமிழ்ச்செல்வி, மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன், மாதவன், நவீன், மனோரஞ்சனி, நாகலட்சுமி, சூலூர் பாபு, சதீஸ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் மாவட்டத் தலைவர் பா.இராமச்சந்திரன் தலைமையில் பெரியார் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தோழமை இயக்கத்தினர் கலந்து கொண்டனர். அமுல்ராஜ் நன்றி கூறினார்.

**விழுப்புரம் :** விழுப்புரம் மாவட்டக் கழகம் சார்பாக செஞ்சி கூட்டுப்பாதை அஞ்சலகம் முன் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 145வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. நிகழ்வில் மாணவர்களுக்கு பெரியார் புத்தகங்கள் மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கிப் பட்டது.

நிகழ்வில் மாவட்டச் செயலாளர் பெரியார் சாக்ரட்டீஸ், ம.தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் ஏ.கே.மணி, துரை திருநாவுக்கரசு, சுடரொளி சுந்தரம், கோபண்ணா, ரகுநாதன், அறிவுடைநம்பி, நந்தகுமார், தேனன் அரசு, திருநாவுக்கரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரனி, பிடாரிபட்டு, திருநந்திபுரம் பகுதி புதிய தோழர்களுடன் விக்கிரவாண்டியிலுள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**மதுரை :** தந்தை பெரியாரின் 145 வது பிறந்த நாளையொட்டி மாவட்டக் கழகம் சார்பில் மாவட்ட மன்றத்திலிருந்து பெரியார் சிலை வரை சனாதன ஒழிப்பு ஊர்வலம் நடைபெற்றது. பின்பு பெரியார் சிலைக்கு மாலையணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது. அடுத்ததாக மதுரை மேலூர் பேருந்து நிலையம் முன்பு பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது, பின்னர் அனைவரும் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

**காஞ்சிபுரம் :** காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்தின் சார்பாக சங்கரமடம் எதிரிலுள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கம் எழுப்பி சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : September 22, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran